www.freetnbooks.com

Kanchipuram DT

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2025

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி                                                                 மதிப்பெண்கள் : 90

பகுதி - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.                                    14 x 1 = 14

பலவுள் தெரிக.

1. கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.
காரணம் : சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.
அ) கூற்று சரி ; காரணம் தவறு    ஆ) இரண்டும் சரி
இ) இரண்டிற்கும் தொடர்பில்லை    ஈ) கூற்று தவறு ; காரணம் சரி

2. சரியான விடையைத் தேர்க.

| | | |
|---|---|---|
| அ) கல்வி அழகே அழகு | - | 1) புறநானூறு |
| ஆ) இளமையில் கல் | - | 2) திருமந்திரம் |
| இ) துணையாய் வருவது தூயநற்கல்வி | - | 3) ஆத்திசூடி |
| ஈ) உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் | - | 4) திருக்குறள் |
| | - | 5) நாலடியார் |

அ) அ-2, ஆ-3 இ-4 ஈ-1    ஆ) அ-3, ஆ-4, இ-1, ஈ-2
இ) அ-5, ஆ-3, இ-2, ஈ-1    ஈ) அ-4, ஆ-1, இ-2, ஈ-5

3. "மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது" எனக் கூறியவர் ________.
அ) வால்ட் விட்மன்    ஆ) எர்னஸ்ட் காசிரர்    இ) ஆற்றூர் ரவிவர்மா    ஈ) பாப்லோ நெருடா

4. நெடுங்குன்று - இலக்கணக்குறிப்பு தருக.
அ) உவமைத்தொகை    ஆ) பண்புத்தொகை    இ) வினைத் தொகை    ஈ) தொழிற்பெயர்

5. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது
அ) நம்பிக்கை    ஆ) பெருமிதம்    இ) புகழ்    ஈ) அச்சம்

6. பிள்ளைக்கூடம் கவிதை இடம்பெற்ற நூல் ________.
அ) வடக்கு வீதி    ஆ) கொடி விளக்கு    இ) தகப்பன் கொடி    ஈ) சுட்டுவிரல்

7. கருப்பட்டி பணங்கற்கண்டு போன்றவை ________.
அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள்    ஆ) நேரடிப் பொருள்கள்
i) அ-மட்டும் சரி    ii) ஆ- மட்டும் சரி    iii) இரண்டும் சரி    iv) அ-தவறு, ஆ-சரி

8. திராவிடர்களை, 'மலைநில மனிதர்கள்' என்று அழைத்தவர் ________.
அ) வால்ட் விட்மன்    ஆ) பாப்லோ நெருடா    இ) கமில் சுவலபில்    ஈ) மல்லார் மே

9. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் ________
கெடுக உலகியற்றி யான்.
அ) பறந்து    ஆ) பரந்து    இ) கறந்து    ஈ) கரந்து

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



10. 'முழவோசை' - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.

அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.

ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே, தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.

ஈ) முன் நின்ற மெய் திரிதல், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

11. "போது" என்ற சொல் உணர்த்தும் பொருள் ________.

அ) போதும் ஆ) காடு இ) மொட்டு ஈ) மேகம்

12. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பைத் தேர்க.

அ) மொழிபெயர்ப்பாளர்

ஆ) இந்தியாவின் பெபிசு

இ) பிரஞ்சு ஆளுநரின் தலைமை மொழிபெயர்ப்பாளர்

ஈ) உலக நாள்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

13. பிழைத் திருத்தத்தில் Dt இக்குறியீடு உணர்த்தும் பொருள்.

அ) ஒற்றை மேற்கோள் குறியிடுக ஆ) தடித்த எழுத்தில் மாற்றுக

இ) சொற்களுக்கிடையே இடைவெளி தருக ஈ) சொல்லையோ, எழுத்தையோ நீக்குக

14. "சுதந்திர தாகம்" என்ற புதினத்திற்கு சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் யார்?

அ) சு.வில்வரத்தினம் ஆ) சி.சு.செல்லப்பா இ) ஜெயமோகன் ஈ) அண்ணாமலையார்

## பகுதி - II

### பிரிவு - 1

குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் - இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?

16. ஐங்குறுநூறு - குறிப்பு வரைக.

17. "எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப் பூச்சியொன்று
பறவைகளும் வரக் கூடும் நாளை" - இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது? நூலாசிரியர் யார்?

18. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறு குறிப்பு வரைக.

20. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர் ஆக்குக.

அ) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

உலை, உளை, உழை

24. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக

அ) பிரிந்தோர் ஆ) ஆழ்க

25. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) மனையென ஆ) பேரழகு

26. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

அ) குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா?

என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு

ஆ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

27. திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக.

28. செந்துறைப் பாடாண்பாட்டு - துறை விளக்கம் தருக.

29. கலைச் சொல்லாக்கம் தருக.

அ) Touch Screen ஆ) Circular

30. உயிரீறு, மெய்யீறு - விளக்குக.

## பகுதி - III

### பிரிவு - 1

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

31. கவிதை ஒரு படைப்புச் செயல்பாடு என்பதை விளக்குக.

32. குறித்த காலத்திற்கு முன்பாக ஊர் திரும்பிய தலைவன் கூறுவனவற்றை ஐங்குறுநூறு கொண்டு விளக்குக.

33. பகைத்திறம் தெளிதல் குறித்துத் திருக்குறள் கூறும் கருத்துகள் யாவை?

34. “உயிர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்” - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

### பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

36. சமணப் பள்ளிகளும், பெண்கல்வியும் - குறிப்பு வரைக.

37. திராவிடப் பழங்குடிகளின் இனக்குழுப் பெயர் களுக்கும், மலைக்கும் உள்ள தொடர்பிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

38. ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன, - ஏன்?

### பிரிவு-3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x4=12

39. வேற்றுமை அணியை சான்றுகளுடன் -விளக்குக

*(அல்லது)*

பிறிதுமொழிதல் அணியை விளக்குக.

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



40. *இலக்கிய நயம் பாராட்டு. (மையக் கருத்துடன் மூன்று நயங்களைச் சுட்டுக)*

"தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகள் விழித்து நோக்க
தென்திரை எழினி காட்ட தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ" *-கம்பர்*

41. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
*(ஆழி, சம்பு, மை, இதழ், வளை)*
1. அடிக்கவும் செய்யலாம், கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ________.
2. கண்ணிலும் எழுதலாம், வெண்தாளிலும் எழுதலாம் ________.
3. அறிவின் பெயரும் அதுதான், அம்புலியின் பெயரும் அதுவேதான் ________.
4. வண்டியையும் இயக்கும், பெரும் கப்பலையும் தாங்கும். ________.

42. மரபுச் சொற்களைத் தொடரில் அமைந்து எழுதுக.

அ) அவசரக் குடுக்கை ஆ) முதலைக் கண்ணீர்
இ) கைதூக்கி விடுதல் ஈ) கானல் நீர்

43. *தமிழாக்கம் தருக*
1) Work while you work and play while you play.
2) The pen is mightier than the sword.
3) An eye for an eye only ends up making the whole world blind.
4) Nobody can hurt me without my permissoin.

## பகுதி - IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3 x 6 = 18

44. அ) 'ஒவ்வொரு புல்லையும்' - கவிதையில் வெளிப்படும் சமத்துவச் சிந்தனைகளைப் புலப்படுத்துக?

*(அல்லது)*

ஆ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.

45. அ) சுந்தர ராமசாமியின் 'காற்றில் கலந்த பேரோசை' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக?

*(அல்லது)*

ஆ) 'தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர்' என்பதை நிறுவுக.

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை சொல்லில் வடிக்க.

*(அல்லது)*

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்துக் கட்டுரை எழுதுக.

## பகுதி - V

குறிப்பு : அடிபிறழாமல் எழுதுக. 4 + 2 = 6

47. அ) 'சிற்றூரும் வரப்பெடுத்த'... எனத் தொடங்கும் புரட்சிக் கவி பாடலை எழுதுக.
ஆ) 'பொருட்டு'' என முடியும் குறள்

*******

www.freetnbooks.com | FREETNBOOKS